## தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 260 - நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நுவரெலியா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத்

தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | செயற்படுத்தப்படாத பரிந்துரைகள் | இந்த அறிக்கை பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6(அ) | வருமானம் மற்றும் செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 1.6(அ) |
| 1.6.(ஈ) | தீர்வுசெய்யப்படாத முற்பணக் கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2.1 |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| :ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தின் சூரிய மின்சக்தி முறைமையில் இருந்து மீளாய்வாண்டில் தேசிய முறைமைக்கு 4603 மின் அலகுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்பட்ட அலகுகளின் அளவு 8443 ஆகும். மின் செலவினத்தை கணக்கீடு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட அளவு உற்பத்தி செய்த அளவுக்கு ஈடு செய்யப்பட்டு ரூபா 196,119 ஆன பட்டியல் தீர்வு செய்ததன் காரணமாக 4603 அலகுகளுக்குரிய மொத்த வருமானம் மற்றும் 8443 அலகுகளுக்குரிய மொத்த செலவினம் கணக்கீடு செய்யும் முறை ஒன்று பின்பற்றப்பட்டு இருக்கவில்லை. | பயன்படுத்தப்பட்ட அலகு அலகு உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளுக்கு ஈடு செய்யப்பட்டு வித்தியாசம் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் குறித்த வருமானம் மற்றும் செலவினம் வெவ்வேறாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்த முடியாமல் இருந்ததாக | வருமானம் மற்றும் செலவினம் நிதிக்கூற்றுகளில் வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டும். |

**(ஆ) இறுதி இருப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட பயன்படுத்திய பொருட்கள் இருப்பு இருப்பின் மொத்தம் ரூபா 14,464,074 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் இறுதி இருப்பு கணக்கீடு செய்யும் தேவைப்பாடு இல்லை என்பதாக | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.1 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் கட்டுநிதி கணக்கு தொடர்பான கூற்றில் (ACA-3) காண்பிக்கப்பட்டிருந்த 2013 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 900,878 ஆன கட்டுநிதி மீதி ஒன்று மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | தீர்வு செய்யப்படாத முற்பண மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 2.2 அரசின் உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் மரணித்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 334,470 ஆன கடன் தொகை 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | இரண்டு உத்தியோகத்தர்களின் ஓய்வூதியக் கோவை தயாரிக்கப்பட்டு வருவதாக | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2.3 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டினை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொத்மலே பிரதேச செயலகத்தின் ஹல்கொள்ள கிராம சேவையாளர் பிரிவின் அனர்த்த நிலைமை காரணமாக குடியேற்றத்தை விட்டு வெளியேற்றி அனர்த்த உதவி சேவை பிரிவினால் ரூபா 1,200,000 தொகை வழங்கப்பட்டு புதிய வீடொன்று நிர்மாணிக்கப்பட்டு நபர் ஒருவர் குடியேற்றப்பட்டிருந்த போதும் அனர்த்த வலயத்தில் அமைந்துள்ள பழைய வீட்டை உடைத்து அகற்றாத காரணத்தினால் குறித்த குடியிருப்பாளர் இரண்டு வீடுகளையும் பயன்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது. | அனர்த்த நிலைமை காரணமாக குடியேற்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட வீட்டிலிருந்து வெளியேறுமாறு நலனாளிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | ஆபத்தான நிலைமையாக இனங்காணப்பட்ட குடும்பங்களுக்காக புதிய வீடுகளை வழங்கும் போது ஆபத்தான நிலைமையிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹங்குரங்கத்த பிரதேச செயலகத்தில் வாகனம் ஒன்றின் எரிபொருள் தாங்கியின் உயர் இயலளவு 80 லீட்டர் ஆக இருந்த போதும் அந்த அளவை மிகைத்து 72 சந்தர்பங்களில் 7,958 லீட்டர் எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 14 ஆம் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் வாகனத்தின் தாங்கியில் இருந்த எரிபொருள் அளவு 10 லீட்டராக இருந்த போதும் அத்திகதியில் ஓட்டக் குறிப்பின் பிரகாரம் தாங்கியில் எஞ்சிய எரிபொருள் அளவு 298.54 லீட்டராக இருந்ததால் 288.54 லீட்டர் எரிபொருளுக்காக ரூபா 101,313 தொகையான (இறுதியாக எரிபொருள் பெற்றுக் கொண்ட அளவினை அடிப்படையாகக் கொண்டு) முறைகேடு ஒன்று இடம்பெற்று இருந்தது. | ஆரம்ப பரிசோதனை யொன்றுக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | முறையான மேற்பார்வையும் கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக |
| (ஆ) அம்பகமுவ பிரதேச செயலகத்தின் 31 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் ஜனவரி முதல் 2024 ஜனவரி வரையான காலப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை | கைவிரல் அடையாளம் இயந்திரம் செயற்படாத சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் வருகை பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது உத்தியோகத்தர்களின் |

| | | | |
|---|---|---|---|
| | தின கடமை நிறைவேற்றும் போது கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படாதிருக்கையில் ரூபா 227,425 தொகை விடுமுறை தின படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதன் பிரகாரம் 2023 ஜனவரி மாதம் முதல் 2024 ஜனவரி மாதம் வகையான காலப்பகுதியில் ஞாயிறு விடுமுறை தின கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும்போது வருகை பதிவேட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் கைவிரல் அடையாள இயந்திரத்திலிருந்து அடையாளத்தை பெற்றுக் கொள்ளும் இயலுமை இல்லாமை தவிர இயந்திரம் செயற்படாமல் இருக்கவில்லை என்பதாக | வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | அம்பகமுவ பிரதேச செயலகத்தின் சமூர்த்தி வங்கிகள் மூலம் மீளாய்வாண்டு பெப்ரவரி முதல் ஜூன் மாதம் வரையான காலப் பகுதியில் மரணித்த 7 நலனாளிகளுக்கான முதியோர் படிகளுக்காக ரூபா 66,500 தொகை தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | நலனாளிகளால் பெயரிடப்பட்டிருந்த முகவர்களால் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அத்தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் | முதியோர் படிகளைப் பெற்றுக் கொள்ளும் நலனாளிகள் மரணிக்கும் போது கிராம சேவையாளரால் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு கொடுப்பனவை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 570 (அ) இன் பிரகாரம் காணி விண்ணப்பங்களுக்கான வைப்புக்கள், வைப்பு செய்யப்பட்ட நாள் முதல் 10 ஆண்டுகளை மிகைத்திருந்தும் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 07 சந்தர்ப்பங்களில் வைப்பு செய்யப்பட்ட ரூபா 876,799 ஆன வைப்புக்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | குறித்த நிறுவனங்களிடமிருந்து விபரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் பதில் கிடைத்தவுடன் எதிர்வரும் எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹங்குரன்கெத பிரதேச செயலகத்திற்குரிய கெட்டதுலாவ அரச இல்லத்தின் திருத்த வேலைகளின் கீழ் அந்த உத்தியோகபூர்வ இல்லத்தின் உள்ளக குளியலறை நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 382,101 செலவிடப்பட்டிருந்த போதும் திசெம்பர் 31 ஆம் தேதி வரையில் அதற்காக நீர் வழங்கள் இடம் பெறாதிருந்ததால் குளியலறையை பயன்படுத்துவதற்கு முடியாமல் விளைவற்று காணப்பட்டதுடன் நிர்மானிக்கப்பட்டிருந்த குளியலறைக்கு நீண்ட காலமாக வெளியிலிருந்து மண் மற்றும் நீர் சேர்ந்திருந்தது. | நீர் இணைப்பிற்காக தேசிய நீர் வழங்கள் சபைக்கு 2022 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தின் ஆரம்பத்திலேயே வேண்டுகோள் விடுக்கப்பட்டு இருந்ததுடன் இணைப்பு இதுவரை வழங்கப்பட வில்லை என்பதாக | திருத்த வேலைகளை பூர்த்தி செய்து நீர் இணைப்பை வழங்கி பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) மண்சரிவு அபாயத்துக்குட்பட்ட வலயமாக 2017 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு இருந்த அம்பகமுவ பிரதேச செயலக பிரிவிற்குரிய ஹட்டன் சமணலகம என்ற இடத்தில் இருந்த 12 குடும்பங்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டு அதில் 06 குடும்பங்களுக்காக அரசின் காணி ஒன்றில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 6,300,000 ஆன நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 06 வருடங்கள் கடந்து இருந்த போதும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் இடை நடுவில் விடப்பட்டிருந்தது. | வெளியேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட குடும்பங்களுடன் கலந்துரையாடி ஆபத்தான இடத்திலிருந்து வெளியேறுவதற்கும் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீட்டில் குடியிருப்பதற்கும் தேவையான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருவதாக | குறித்த செயற் திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்து குடியிருப்பு செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும். |
| (இ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் தொடம்கும்புற அனர்த்த செயற்பாட்டு நிலையத்தை பாதுகாப்பு நிலையம் ஒன்றாக | குறைபாடுகளை சீர் செய்து திருத்தவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்த நடவடிக்கை | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும் |

| | | |
|---|---|---|
| மேம்படுத்துவதற்காக 2020 ஆகஸ்ட் 31-ஆம் திகதி ரூபா 940,500 தொகை ஹங்குரன்கெத பிரதேச செயலகம் செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் குறித்த கட்டிடம் எவ்வித பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | எடுக்கப்படுவதாக | |

## 3.2 செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசு வழங்கும் ரூபா 4 இலட்சம் தொகையில் நலனாளியால் கொள்வனவு செய்யப்பட்ட காணி ஒன்றில் அரசினால் வழங்கப்பட்ட நிதி உதவி அடிப்படையில் வீடு ஒன்றை நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தின் கீழ் அனர்த்த நிவாரண சேவைகள் பிரிவினால் 05 பிரதேச செயலக பிரிவுகளில் ஆபத்தாக இனங் கண்ட 159 குடும்பங்களுக்காக வீடுகளை மீள் குடியேற்றுவதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதும் அதில் 115 குடும்பங்கள் அவ்வாறு மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரசினால் வழங்கப்பட்ட காணி ஒன்றில் அரசின் நிதி ஏற்பாடுகளின் கீழ் வீடுகளை நிர்மாணிக்கும் வேலை திட்டத்தின் கீழ் அனர்த்த நிவாரண சேவை பிவினால் நுவரெலியா மாவட்டத்தில் 970 குடும்பங்களை தற்போது குடியிருக்கும் இடத்தில் இருந்து அகற்றப்பட்டு பாதுகாப்பான இடத்தில் குடியிருப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அதில் 798 குடும்பங்களுக்காக பாதுகாப்பான இடத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனர்த்த பணிப்பாளர் நாயகத்திற்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக | அனர்த்த பிரதேசங்களில் குடியிருப்பவர்களை வெளியேற்றி மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) அம்பகமுவ பிரதேச செயலக பிரிவில் மண் சரிவு மற்றும் அதி ஆபத்தான நிலைமையில் காரணமாக 2019 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டு இருந்த 04 குடும்பங்களுக்குள் கலுகல்ல மில்லகஹமுள்ள | நிர்மாணங்களின் செயற்த்திட்ட முன்னேற்றங்களின் பிரகாரம் தவணை விடுவித்தல் வருடாந்தம் விடுவிக்கப்பட வேண்டிய தொழில்நுட்ப | அனர்த்த பிரதேசங்களில் இருந்து குடியிருப்பாளர்களை வெளியேற்றி மீள் குடியேற்றத்தை |

| | | |
|---|---|---|
| பிரதேசத்தில் அவர்களால் கொள்வனவு செய்யப்பட்ட காணி ஒன்றில் வீட்டை நிர்மாணிப்பதற்காகவும் காணி கொள்வனவிற்காகவும் ரூபா 2,700,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 மே் திகதி வரை நிர்மாண நிர்மாணங்கள் ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டதுடன் செயன்முன்னேற்றம் 30 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது | உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படுவதாக | துரிதப்படுத்த வேண்டும் |

**3.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயன்முன்னேற்ற அடையாத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜனாதிபதி செயலக நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது ஹங்குரன்கத பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 6,900,000 தொகை செலவிடப்பட்டு விதை போஞ்சி களஞ்சியப்படுத்துவதற்காக கட்டிடம் ஒன்றும் குளிர் அறையொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | தற்போது விதைகளின் விலை தொடர்பில் மீள் கொள்வனவு ஒன்று இடம்பெறுவதற்கு தேவைப் படாததால் எதிர்காலத்தில் விதை போஞ்சி விலை தளம்பல் ஏற்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் குறைந்தது 10000 கிலோ விதை போஞ்சி கொள்வனச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயற்திட்டத்தை நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நுவரெலிய மாவட்ட செயலகத்திற்குரிய ரூபா 4,383,929 ஆன லொறி பவுசர் 02 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாகவும் 04 பிரதேச செயலகங்களுக்குரிய பெறுமதி இனங்காண முடியாத 93 சொத்து உருப்படிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக விளைவற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. | இது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 மார்ச் 23 ஆம் திகதி ஓய்வு பெற்ற 2020 மே 30 ஆம் திகதி மரணித்த நலனாளியின் விதவை அனாதை ஓய்வூதியம் 3 ஆண்டுகள் கடந்திருந்த போதும் நுவரெலியா பிரதேச செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மரணித்த நபர்களின் கோவைகளை கண்டுபிடிப்பதற்கு முடியாதிருப்பதால் அவரது துணைவியும் 2023 திசெம்பர் 6 ஆம் திகதி மரணித்ததாகவும் | உரிய காலத்தில் கோவை தயாரிக்கப்பட்டு ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1981 இன் 58 ஆம் இலக்க மற்றும் 1983 இன் 29 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1979 இன் 07 ஆம் இலக்க அரசின் காணி உரித்தை மீள பெற்றுக் கொள்ளும் சட்டத்தின் பிரகாரம் பிளக்பூல் இடத்தில் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்குரிய காணியின் உரித்தை கையேற்பதற்கு நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட 76818 ஆம் இலக்க வழக்கிற்குரிய 2006 நவம்பர் 28 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த தீர்ப்பு மற்றும் 2010 ஒக்டோபர் 01 ஆம் திகதி நுவரெலிய மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த தீர்ப்பின் பிரகாரம் உரித்தை கையேற்பதற்கு 2024 மே 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வழக்கு கட்டளையை செயற்படுத்துவதற்கான நிதி ஏற்பாடு காணி ஆணையாளர் நாயக திணைக்களத்தினால் 2024 பெப்ரவரி 19 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதால் அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை மேற்கொள்வதாக | வழக்குத் தீர்ப்பின் கட்டளையை செயற்படுத்தி உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | அம்பகமுவ பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் விடுமுறையை அறிவிக்காமல் 27 நாட்கள் சேவைக்கு அறிக்கையிட்டு இருக்கவில்லை. அவ்வாறே நிறுவன தலைவருக்கு அல்லது மேற்பார்வை உத்தியோகத்தருக்கோ அறிவிக்காமல் பொதுமக்கள் தினத்தில் கடமைக்கு அறிக்கையிடாமை, வெளிக்கள கடமைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வேலைகள் | ஒட்டுமொத்தமாக இந்த உத்தியோகத்தரின் கடமைகள் தொடர்பாக மேற்பார்வையின் போது தாமதம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன் இதன் பின்னர் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | முறையான கண்காணிப்பு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டை பலப்படுத்தி செல்ல வேண்டும் சேவைக்கு அறிக்கையிடாமை தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் முன்னோடி வேலை திட்டங்கள் சமர்ப்பிக்காமை என நீண்ட காலத்திலிருந்தே மேற்கொண்டிருக்கையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற்பார்வை உத்தியோகத்தரால் எவ்வித முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு ஒழுங்காற்று நடைமுறையை பின்பற்றாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 581,160 சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | தலவாக்கலை மற்றும் நுவரெலியா பிரதேச செயலகங்களுக்குரிய காத்திருப்பு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 881 முதியோர் வலது குறைந்தோர் மற்றும் சிறுநீரக படிகள் விண்ணப்பதாரிகளுக்கு படிகளை பெற்றுக்கொள்ள வருமாறு உத்தியோகத்தர்களால் முறையாக அறிவித்தல் வழங்காமல் கவனயீனமாகவும் நடவடிக்கை எடுத்து 2023 ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்குரிய ரூபா 8,810,000 ஆன படிகள் நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக | தகைமை பெற்றுள்ள நலனாளிகளுக்கு படிகளை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய படிகளை செலுத்தாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உள்ளவரான பதவியணியுடன் ஒப்பிடும்போது மாவட்ட செயலகம் மற்றும் 7 பிரதேச செயலகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை 24 ஆக இருந்த போதும் அதில் 17 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை 491 ஆக இருந்த போதும் 109 வெற்றிடங்கள் காணப்பட்டன. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 02 அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் பதவிகள் மிகையாக காணப்பட்டன. | அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |